1978 மார்ச் 22]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்த கேள்வியையும் சேர்த்து எடுத்துக் கொள்ளலாம். மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் இதற்கும் பதில் சொல்லிவிட்டால் நல்லது.

* 654. வினு— திரு. யா. சை. மு. யூசுப் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) நாங்குநேரி வட்டத்திலுள்ள கொடுமுடியாறு மற்றும் பச்சையாறு திட்டங்கள் எந்த நிலையில் உள்ளன ?

(ஆ) அவைகளை உடனடியாக நிறைவேற்ற எடுக்கப் பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) மற்றும் (ஆ) ; இத் திட்டங்கள் மறு பரிசீலனையில் உள்ளன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி எண் 655.

திரு. சோ. அழகர்சாமி : தலைவர் அவர்களே, நான் கையைத் தூக்கிக் கொண்டிருக்கிறேனே, அது தங்கள் கண்ணில் படவில்லையா ? நான் கேள்வி கேட்கக் கூடாதா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சபாநாயகரைக் கேள்வி கேட்கக்கூடிய நிலை இந்த அவையிலே இருக்கக் கூடாது. என் கண்ணில் படவில்லை. பேச வேண்டுமென்ருல் பேசலாம். திரு. அழகர்சாமி.

திரு. சோ. அழகர்சாமி : தலைவர் அவர்களே, நான் தங்களை கேள்வி கேட்கவில்லை. நான் கையைத் தூக்கியது தங்கள் கண்ணில் படவில்லையா என்றுதான் கேட்டேன்.

தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் முக்கியமானத் திட்டம். நாங்குநேரி வட்டத்தில் ஏறக்குறைய நூற்றுக் கணக்கான ஏக்கருக்கு பாசனத்திட்டமாகும். இந்தத் திட்டம் ஒரு பெரிய மனிதரின் தலையீட்டால் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லப்படுகிறது. இதனுல் எல்லாக் கட்சிகளும் சேர்ந்து அங்கே ஊர்வலம், உண்ணுவிரதம், போராட்டம், மறியல் எல்லாம் செய்தார்கள். அதற்கு 30, 40 லட்சம் ரூபாய் செலவு செய்யப்பட்டிருக்கிறது. ஒரு தனி நபருடைய தடங்கல் காரணமாக இந்தத் திட்டம் நிறுத்தப்பட்டது என்று சொல்லப்படுகிறது. ஆகவே, பல்லாயிரக்கணக்கான நிலம் லாபமடையக்கூடிய இந்தத் திட்டத்தை நிறைவேற்றி வைப்பதற்கான நடவடிக்கைகளை இந்த அரசு மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இந்தத் திட்டத்திற்கு 166 லட்சம் ரூபாய் செலவாகும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. 1975 ஆம் ஆண்டு உத்தரவிடப்பட்டது. ஆனுல், மீண்டும் ஆய்வு

செய்தபோது அதனுடைய மதிப்பீடு 223 லட்சம் ரூபாய் ஆகுமென்று மதிப்பிடப்பட்டுள்ளது. இதற்கிடையில் வறட்சி நிவாரணப் பணியின்கீழ் 1966 ஆம் ஆண்டு 25 லட்சம் ரூபாய் ஒதுக்கி வள்ளியூரில் ஒருஅலுவலகத்தைத் திறந்து குடியிருப்பையும் கட்ட ஆரம்பித்து விட்டார்கள்.

ஆனால் இந்தத் திட்டத்தைப் பற்றி போர்டு மெம்பர் (புட் ப்ரொடக்ஷன்), சீஃப் எஞ்சினியர் ஆராய்ந்தபோது இந்தத் திட்டம் சிக்கனமாக இராது என்ற கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இருப்பினும், இந்தத் திட்டத்தைப் பற்றி விரிவாக ஆராய்ந்து மீண்டும் அரசுக்கு அறிக்கை அனுப்ப வேண்டுமென்று தலைமைப் பொறியாளருக்கு (பாசனம்) உத்தரவிடப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரை கைவிடப்பட்டது என்று எண்ணத் தேவையில்லை. பெரிய மனிதர் தலையீடு இருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். என்னிடத்தில்கூட சிலர் சொன்னார்கள். காக்கை உட்காரப் பனம்பழம் விழுந்ததுபோல் அவர் பெயரை இணைத்துச் சொல்கிறார்களே தவிர, அதற்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை.

திரு. க. அன்பழகன்: இந்த அணை கட்டுவதற்காகப் போடப்பட்ட மதிப்பீட்டின் அளவு விரிவடைந்து விட்டதன் காரணமாக இடையில் நிறுத்தப்பட்டது என்று சொன்னார்கள். முதலில் பரிசீலனை நடைபெற்று எல்லா விதமான விவரங்களும் சேகரிக்கப் பெற்று, அலுவலகம், குடியிருப்பு போன்றவை கட்டி முடிக்கப் பட்டு விட்டன என்று சொன்னார்கள். அலுவலகம், பொறியாளர்களுக்கு வீடுகள் எல்லாம் கட்டி முடிக்கப்பட்டுவிட்ட பிறகு நிறுத்தப்பட்டதற்குக் காரணம் என்ன உண்மையாகவே காக்கை உட்கார்ந்ததா? பனம்பழம் விழுந்ததா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: அப்படி அல்ல. 223 லட்சம் ரூபாயைச் செலவழித்தும் அதிலே பெரும் பயன் இல்லாமல் போய்விடும். அப்படிப் பயன் இல்லாத ஒன்றை 223 லட்சம் ரூபாய் செலவுசெய்து நிறைவேற்றினால் 223 லட்சம் போய்விடும். இப்போது கைவிட்டால் 25 லட்சம்தான் போகும். ஆகவேதான், அந்தத் திட்டத்தைப் பற்றி நன்றாக ஆராய்ந்து எடுத்துக் கொள்ளவேண்டுமென்று அரசு ஆலோசனையை வழங்கியிருக்கிறது.

New anicuts in Periyakulam talk

Q. No. 655 Thiru. K. KANDASAMY. Will the Hon. the Minister for Public Works be pleased to state:

(a) Whether action has been taken to construct Sothupparai Anicut and Kuppombarai Anicut in Periyakulam taluk Madurai district, and

(b) if so, the details thereof?